
$3.

# இன்திலார் கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்குலாப் கவிதைகள்

– கவிஞர் இன்குலாப் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு:-

- தமிழ்த்தாய் பதிப்பகம் - 1991
- விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகம் - 1993

அச்சுப்பதிப்பு:- தமிழ் அச்சகம், பாரிஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

தமிழக முற்போக்கு முகாமின் முதன்மைக் கவிஞரான இன்குலாப் அவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின்பால் ஈடுபாடு கொண்ட கவிஞர்; தமிழீழ விடுதலைக்காகப் போராடும் உண்மை இயக்கத்தையும், தலைவனையும் தொடக்க காலத்திலேயே இனங்கண்ட கவிஞன்; இந்திய வல்லாதிக்க வல்லூறுகளின் உள்நோக்கத்தை அன்றே அம்பலப்படுத்திய கவிஞன்; தனது பேச்சிலும், எழுத்திலும், கவிதைகளிலும் விடுதலை, பொதுவுடமை உணர்வுகளை ஊட்டி வரும் மக்கள் கவிஞன்; துப்பாக்கி முனைக் கீடாக அவரது பேனா முனை புரட்சிக் கனல் மூட்டிவருகிறது.

இந்தியாதான் எல்லாம் என்று சில குழுக்கள் இந்திய அரசிடம் சரணடைந்த காலத்தில் (1983 லேயே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விடுதலை யாசித்துப் பெறும் தானமல்ல. நமது அவசரத்தில் அட்டைகளிடம் போய் இரத்த தானம் கேட்க வேண்டாம்.

கம்சனின் பிடியில் ஈழக் குழந்தை கதறி அழு கிறது. உண்மைதான், அதற்காகப் பூதகியைப் போய்ப் பாலுட்டச் சொல்லாதீர்கள்"
என்று அறிவுரை பகன்ற ஞானக் கவிஞன் அவன்,

விடுதலைப் புலிகள் இயக்கம் சமூக விரோதக் குழுக்களின் மீது நடவடிக்கை எடுத்த போது அதை சகோதரப் படுகொலை எனச் சிலர் கொச்சைப்ப டுத்தி வசை பாடிய காலத்தில், தமிழீழக் கோட்பாட் டிற்குக் குந்தகம் விளைவித்த அந்த புல்லுருவிகள் மீது புலிகள் எடுத்த நடவடிக்கைகளை அரசியல் நியாயமான நடவடிக்கை என்று அடித்துக் கூறியவர் கவிஞர் இன்குலாப் அவர்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்து தமிழ கக் கவிஞராகிய இன்குலாப் அவர்கள் தீட்டிய கவி தைகள் சிலவற்றைத் தொகுத்து "இன்குலாப் கவி தைகள்" என்ற படைப்பாக வழங்குவதில் நாம் பெருமை அடைகிறோம்.

நன்றி

இயக்குனர்
தமிழ்த்தாய் பதிப்பகம்
யாழ்ப்பாணம்
ஆடி 1991.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை

இலேசாய்க் கருதி
நுழைந்த எதிரி
எடுத்து வைத்த
ஒவ்வோர் அடியையும்
புல்லும் எதிர்த்துப்
போர்க் கோலம்
பூண்டது...
பூவும் நெருப்புப்
பொறியாய்ப் பொசுக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கணங்களில்
எமது களங்களில்
பொன்னை உதறியும்
பூவை விலக்கியும்
மானுடப் பாதி
மறுபடி எழுந்தது.
ஏந்திய ஆயுதமும்
உயர்த்திய பதாகையும்
வீழ்ந்து படாமல்
வீரத்தோள் கொடுத்தது.

எதிரியின் இலக்கு
இன ஒடுக்குமுறை மட்டுமல்ல
பாலியல் ரீதியான பலாத்காரமுந்தான்...
துருப்பிடித்த நினைவுகளோடு
நுழைந்த எதிரிக்கு
வளைத்துப் பிடிக்கும்
கொடிகளாய் இல்லை...
பறித்துக் கசக்கும்
மலர்களாய் இல்லை...
எதிர்க்கும் பெண்புலிகள்
என்பதை நிறுவினீர்
இறந்து வாழும்
வாழ்க்கையை நிரூபித்தீர்...

மரணத்தில்
தன்மான வாழ்க்கையை நிச்சயித்த
வீராங்கனைகளே
உமக்கிது காணிக்கை.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரத்த தானம்

கானம்... ரத்த
கானம்
வீசும் காற்றைச் சுடுகிறது

கரையில்
மோதும் அலைகள்
கனலை இறைக்கிறது... கானம்
வெடித்துச் சிதறும்
இதயங்கள் அங்கே
விம்மி இசைத்திடும்
விடுதலைக்கானம்
துடிக்கும் இதயம்
உனக்கிருந்தால் - உன்னைத்
தூங்கவிடாது
ரத்தகானம்... கானம்

தவழும் அலைகளில்
உப்புத் தோழமை
தமிழன் வியர்வை
முதலில் கண்டது
பழகிய சொற்களை
நிலம் கேட்டிருந்தது
பறவைகள் கேட்டுப்
பாடித்திரிந்தன... கானம்

தேயிலைத் தோட்டத்தில்
தென்னந்தோப்பினில்
வெள்ளெலும்பு மிஞ்ச
ரத்தம் சிந்தினோம்
சந்தனம் லவங்கமாய்
ஈழம் மணந்தது
எங்கள் எலும்புகள்
உரமாய்க் கிடந்தது... கானம்

சமத்துவம் கேட்டோம்
இல்லை என்றார்கள்
மாநிலம் கேட்டோம்
மறுதலித்தார்கள்
விடுதலை கேட்டோம்
வெகுண்டெழுந்தார்கள்
வெறியில் மனிதநிலை
பிறழ்ந்தார்கள் கானம்

குடிசைகளோடு
குழந்தைகள் கருகின
குவிந்த அறிவுச்
சுவடிகள் கருகின
போதிக்கிளைகளில்
மனித மாமிசம்
பொசுங்கியதோ
புத்த ஜீவகாருண்யம்... கானம்

ஈழத்தமிழர்க்குக்
கரங்கள் வேண்டும்
இங்குள்ள தமிழர்
கரங்கள் நீளுக...
ஈழத்தமிழர்க்குத்
தளங்கள் வேண்டும்
எங்கள் கரைகள்
தளங்கள் ஆகுக...
ஈழத்தமிழர்க்கு
ஆயுதம் வேண்டும்
இங்குள்ள தமிழர்
ஆயுதம் செய்க...
ஈழத்தமிழர்க்கு
ரத்தம் வேண்டும்
இங்குள்ள தமிழர்
ரத்தம் பாய்க!... கானம்

□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலையின் பரிமாணம்

விடுதலையின் பரிமாணம்
உன்
மூச்சில் இல்லை

உன்
விழிகளில் விரியும்
வெளிகளில் இல்லை
முத்தமிடக் குவியும்
உன்
உதடுகளில் இல்லை

உன்
காதலியின் மார்பு
விம்மிதங்களில் இல்லை

உன்
கானகப் பறவைகளின்
கானங்களில் இல்லை

உன்
வேலிக்கு வெளியே தலைநீட்டும்
பூக்களில் இல்லை

உன்
குழந்தைகளின்
மழலைகளில் இல்லை
உனது
யாழ்ப்பாணத் தமிழில் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்
விடுதலையின் பரிமாணம்
உன்னை வைத்து நடாத்திய
எமது பேரங்களில்

உன்னை விற்று முடித்துக்கொண்ட
எங்கள்
கைகுலுக்கல்களில்
லாபத்தை எண்ணும்
வல்லரசுகளின் வாழ்த்துக்களில்

உன்னை அதட்டும்
எமது
அதிகாரத் தாய்மொழிகளில்

உனக்கு எதிராக நான்வளர்த்த
ஏவல் நாய்களின் குரைப்பில்
உனது புல்வெளியைத்
துவைத்துச் செல்லும்
என்
டாங்கிச் சக்கரங்களில்

உன்
மார்பைப் பிளக்கும்
என் தோட்டாக்களில்

உனது வானத்தில் வட்டமிடும்
என்
போர் விமானங்களின் இரைச்சலில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது அலைகளை விரட்டும்
என்
பீரங்கிப் படகுகளில்

உன் குடியிருப்பைத் தரைமட்டமாக்கும்
என்
குண்டு மாரியில்

நான்
காயப்படுத்திச் சுவைத்த
உன்
தங்கையின் மௌனங்களில்

எந்த இரும்புத்திரையினும் வலிய
என்
இந்தியக் கதர்த்திரையில்
எந்த ஒரு பொய்க்கும் தொடக்கமாகும்
என் சத்திய மேவ ஜெய தேயில்

ஊமையாகிக் கொண்டிருக்கும்
உலக மனச் சாட்சிகளில்
நான் வைக்கும் புள்ளியில்
நீட்டும் கோட்டில்
புரிந்ததா. . .
உன் விடுதலையின் பரிமாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிந்து கொள்ளுங்கள்

புரிந்து கொள்ளுங்கள் -எதிரியைப்
புரிந்து கொள்ளுங்கள்

சூரியனை அப்பிய முகங்களுக்குள்ளே
சூனிய இருள்கள் புதைந்து கிடக்கும்
உதட்டில் நெளியும் சாத்வீக மந்திரம்
உள்ளத்தில் ஆயிரம் ஓநாயின் ஊளை

அகிம்சை உறைக்குள் ரத்தவாடை
அமைதிவனத்தில் நச்சுப் பூக்கள்
தருமச் சக்கரம் நசுக்கும் தடங்களில்
புதையும் மானுட உயிரின் ஓலம்

இதனது முகத்திரை எவர்கிழிப்பார்கள்
இதனது தோலை எவர்உரிப்பார்கள்
இந்த எதிரியைப் புரிந்தவர் எவரோ
புதிய வரலாற்றைப் படைப்பவர் அவரே.

□□□
□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களத்திலும் காற்றிலும்

அந்தத் தம்பிகள் எங்கே?
நூறு புன்முறுவலைத்
தொடுத்த சரங்களாய்
நுரைகள் ஒதுங்கும்
கடலின் கரையில்...
சுவடு ஒவ்வொன்றும்
அலைகளில் மறைகையில்...

தொடுவானும் கடலும்
தொடுகின்ற வளைவைக்
கண்களால் துழாவிக்
கணநேரம் கழித்து
என்னைப் பார்த்து
என் துணைவி கேட்டாள்

"அந்தத் தம்பிகள் எங்கே?"
"தம்பிகள் என்றால்..."
"அவர்கள் தாம்"
அக்கா என்ற சொல்
வாயெல்லாம் நிறைய
அடிக்கடி நமது
வீட்டுக்கு வந்து

புதிதாய் வந்த புத்தகங்களையெல்லாம்
ஒன்று விடாமல் வாங்கிச் செல்வார்களே
அவர்கள்...
கண்களில் விடுதலைக்
கனவுகளோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்தில் சயனைட்
குப்பிகளோடும்
வந்து செல்வார்களே. . .
புலிகள். . .
இப்போது
ஏன் வரக் காணோம்?

அந்த முகங்களை நானும் அறிவேன்
கறுப்பாய் மாநிறமாய்
எலுமிச்சை மஞ்சளாய்
மானுட வண்ணங்கள்
அனைத்திலும்
வரும் போகும் அந்த முகங்கள்
மறைந்தறியாத புன் முறுவல்களோடு
அந்த முகங்களை நானும் அறிவேன். . .

நெஞ்சிலிருந்து வந்த "அக்கா" என்ற சொல்
துணைவிக்கு அன்புத் தம்பிகளாய் நிறுத்தும்
சுடர்விழி நிமித்தி உரைக்கும் ஆட்கள்
என்
நினைவுக்குச் சூடேற்றும் தோழர்களாய் உயிர்த்தும்
வந்து செல்லும் நாள்களின் நிமிடங்கள்
எங்கள் இல்லம் எங்கும் மின்னல்கள்
அந்தத் தம்பிகள் எங்கே போயினர்?

மாலைச் சூரியக்
 கதிர்களில் மின்னி
நொறுங்கும் வெள்ளை
 நுரை ஒவ்வொன்றிலும்
 அவர்களின் புன்னகை
 அவர்களின் ஒளி முகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடுவானுக்கப்பால்
தொடரும் கடலின்
அக்கரை மணலில்
அவர்களின் சுவடுகள் -

அலைகளின் கைகள்
　　வாரிப் போகவும்
காற்றின் பயணத்தில்
　　கலந்து கொள்ளவும்...
உரிமையை நேசிக்கும்
　　ஒவ்வொரு முகத்திலும்
உயிரின் மூச்சாய்
　　உறவு கொள்ளவும்...

அந்தத் தம்பிகள்
இனியும் நீளும் விடுதலைப் போரை
எழுதும் குருதிமைக் கூடாய் நடக்கலாம்...
அவர்கள் நடந்த குருதித் தடங்களில்
அன்புத் தங்கையர் அணிவகுக்கலாம்...

அசோகச் சக்கரங்களால்
துவைக்கப்பட்ட
இல்லங்கள் மீண்டும்
எழுந்து நிற்கையில்
புதிதாய் நடப்படும்
பூச் செடிகளோடு
விடுதலைக் கொடியும்
சேர்ந்து துளிர்க்கும்.
அந்தக் கொடிகள்
காற்றில் அசைகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் புன்னகை
விழிகளை நிறைக்கும்

இனியும் அந்தத் தம்பிகள்
இருந்தால்...
மானுட வண்ணங்கள் அனைத்திலும்
மறைந்தறியாத புன்னகையோடு
களத்தில் நிற்பார்கள்
இல்லையேல்
நாம் உயிர்க்கும்
காற்றில் இருப்பார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரவணக்கம்

வாழ்க்கையை
விடுதலைப் போரினாலும்
மரணத்தை
அஞ்சாத தியாகத்தாலும்
கடைசிவரையும்
கனப்படுத்தி
பூமிகனக்கப்
புதைந்த புலிகளே!

காலத்தின் செவிகளில்
உமது கர்ச்சனை...
யுகங்களின் நெற்றியில்
உமது திருப்பெயர்...

நாளைய மானுடப்
பிஞ்சு முகங்கள்
முகர்ந்து பார்க்கும்
ஒவ்வொரு பூவிலும்
உங்கள் உயிரின்
வாசம் கமளும்...

நாளைய விடியலை
ஈழத்தில் எழுத
நீளும் கதிர்களில்
நிச்சயம் உமது
உயிரின் சூடும்
ஒன்றியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரோகத் தூசுப் படலத்தை
உயிரின் சுவாலையால்
பொசுக்கிய புலிகளே!

காலியான சயனைட் குப்பிகளும்
கழன்று கிடக்கும் தோள் துப்பாக்கிகளும்
இன்னும் உலராத இளைய ரத்தமும்
அனைத்திலும் மேலாய்
உம் வாழ்வும் மரணமும்
விடுதலை வரித்த
அடையாளங்களாய்
வரலாற்று வரிகளில்
கனத்துக் கிடக்கும்
ரத்த சாட்சிகளே!

வீரவணக்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடதிசை பெயரும்
# வெண் கொக்குகளே!

கிளைகளில் விழித்த
பவழமல்லிகைகளில்
ஓடிய விழிகளை
மேலும் உயர்த்தினேன்
உச்சி வானில்
நகரும் பூக்கள்
சாயும் கதிர்களைச்
சிறகுகளில் சுமந்து
வடதிசைப் பெயரும்
வெண்ணிறக் கொக்குகள்
கறுத்த கால்களில்
வெண்மையின் விரிப்புகள்...
துக்கஞ் சுமந்த
சமாதானக் கொடிகள்...
சிறகுகள் முளைத்த
வில்லைப் போலவும்
அந்திக்குச் சூட்டிய
மாலை போலவும்...
தென்திசைச் சென்று
வடதிசை மீளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண் கொக்குகளே!
ஒரு சில வினாக்கள்
விரிந்த உங்கள்
சிறகுகளுக்கு அடியில்
எத்தனைக் கடல்கள்
அலைகள் வீசின?
எத்தனைக் குன்றுகள்
நகர்ந்து போயின?
மேக மூட்டத்துக்குக் கீழே
துப்பாக்கிப்
புகைமூட்டங்களில்
புதைந்து கொண்டிருக்கும்
இலங்கைத் தீவைக்
கடந்து வந்தீர்களா?
நீங்கள்
இறங்கி இளைப்பாறிய
மரங்களுக்கு அடியில்
உதிர்ந்த சருகுகளில்
தலைவைத்துக் கிடந்த போராளிகளைப்
பார்த்து வந்தீர்களா?
அவர்களுக்கு
வடதிசையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறந்து வந்தவற்றுள்
நீங்கள் மட்டுமே
அமைதியின் சின்னங்கள்...
விரித்த உங்கள்
வெள்ளைச் சிறகுகள்
ஒப்பந்தச் சரத்துக்களால்
கறைப்பட்டதில்லை
தொடரும் இரும்பு நாய்களின்
குரைப்பில்
அவர்களின் பெருமூச்சைக்
கேட்க முடிந்ததோ?
சரசரக்கும் சருகுகளில்
சன்னமாய் ஒலித்த
குரல்களில் இருந்த செய்திகள் என்ன?
பதவி நாற்காலிப்
பந்தய ஓட்டத்தில்
மிதிபட்டு நசுங்கிய
ஈழப் பிரச்சனையோ?

அமைதித் திரையில்
குருதியில் குளிக்கும்
அசோகச் சின்னங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலப்படுத்த
இனியும் தமிழகம்
எழும் என்ற நம்பிக்கையா?
வடக்கில் எந்த
வளர்ந்த மரங்களில்
அடைவீர் என்பதை
அறியேன்... ஆயினும்
அமரும்போது கூறுக...
அந்தக்
கானகச் சருகுகளில்
புதைந்து கிடப்பவை
விடுதலைக்கான விதைகள் என்று...
கானகம் சிவத்த
ரத்தத் துளிகளில்
முளைவிடும்... வானத்தை
முட்டி வளரும் என்று...
கடந்து வந்த கடல்களின்மீதும்...
வழியனுப்பி வைத்த குன்றுகள் மீதும்...
ஆணையிட்டுக் கொக்குகளே:
கூறுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைகளில் இனியும் நாங்கள்

புரளும் அலைகள்
எமது கரைகளில்
மீண்டும்
ஒரு சோகத்தை எழுதின.

நுரைகள்
உங்கள் இதயங்கள் போலவே
வெடித்துச் சிதறின.

காற்று
ஈழத்தின்
கனலாய் வீசுகிறது.
கரைகளில் இனியும்
நாங்கள்
கைகட்டி நிற்கவோ?

சிங்கள நுகத்தடி
எங்கள் பிடரியில்
அழுத்தாமலிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள வெறிநகம்
எங்கள் விழிகளைத்
தோண்டாமலிருக்கலாம்.

சிங்களத் தோட்டா
எங்கள்
மார்பைப் பிளக்காமலிருக்கலாம்.

எங்கள் பிடரியிலும்
ஒரு நுகத்தடி உண்டு
எங்கள் முகத்திலும்
குழிகள் உண்டு.

எங்கள் மார்பிலும்
காயங்கள் உண்டு
இரவின் துகள்களாய்
கறுப்பு
நமது இதயத்தை சமீபித்திருந்தாலும்
ஒளியின் சிவந்த கீற்றுக்கள்
தொலைவில் இல்லை.

விடுதலை
யாசித்துப் பெறும்
தான மல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது அவசரத்தில்
அட்டைகளிடம் போய்
ரத்த தானம் கேட்கவேண்டாம்.

கம்சனின் பிடியில்
ஈழக் குழந்தை
கதறி அழுகிறது
உண்மை தான்.

அதற்காகப்
பூதகியைப் போய்ப்
பாலூட்டச் சொல்லாதீர்கள்.

அஸ்ஸாமின்
ரத்தக் கறை படிந்த கரங்கள்
என்ன நியாயத்தில்
ஈழத்தின் கண்ணீரைத் துடைக்கும்?

சூரியனின் ஒளிப்பரப்பில்
பூமியின் முகம் நிமிரும் தருணங்கள்
விடியல் என்ற
தகுதியைப் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கு முறைகளை எதிர்க்க
உயரும் கரங்களே
வரலாற்று வானில்
சூரிய கிரணங்கள்.

போராடும் ஈழமே!
உனது விடியலைச்
சூரியனில் தேடு.

போராட்டக் கனலில்
உன்னையும்
ஓர் ஒளிக்கதிராய் வார்த்துக்கொள்!

நமது ஒளி வீச்சு
ஈழத்தை மட்டுமல்ல
எல்லாத் தேசிய இனங்களையும்
இருளிலிருந்து
விடுதலை செய்யும்

மானுடக் குரல்கள்
எங்கிருந்தாலும்
தோழமை கொள்ளட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவற்ற வானவெளிகளில்
ஒடுக்கப்படும் குரல்கள்
ஓங்கி ஒலிக்கட்டும்.

சம்பவிக்க இருக்கும்
சர்வ தேசியத்திற்கு

சிங்களத் தோழனே!
இந்தியத் தோழனே!
உன்னோடு கைகுலுக்கி நடப்பேன்
சரிசமமாக.

ஆனால்
ஒரு போதும் உன்னை
என் தோளில்
உட்கார விடமாட்டேன்.

காற்று
ஈழத்தின்
கனலாய் வீசுகிறது.

கரைகளில்
இனியும்
நாங்கள் கைகட்டி நிற்பமோ?

□ □ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது தலைமை

மக்கள் வெற்றிக்குக் கட்டியம் கூறும்
மாபெரும் வரலாற்றுத் திருப்பங்களாலே
இந்த நூற்றாண்டு நிறைந்துகொண்டிருக்கிறது

திறந்த எனது விழிகளுக்கு முன்பு
திருப்பம் நிகழ்த்திய மனிதர்கள் இல்லை
அழியாமல் இன்னும் அவர்களின் சுவடுகள்

இந்த நூற்றாண்டின் இறுதித் துணுக்குகளில்
தொடக்கம் போலவே சுவடுகள் பதிக்க
தெற்கிலிருந்தொரு புலிப்படை.....

சக்கையாய்க் கிடந்த தமிழினத்துக்குப்
புரள்கையில் புலம்பக் கனவுகள் இருந்தன

மூதாதையர் சூடிய துருப்பிடித்த மணிமுடியும்
செல்லரித்துப்போன செங்கோலும் குடையும்
ஜாவா சுமத்திரா சமுத்திரப் பரப்பில்
மூழ்கிப்போன ராஜேந்திரன் கப்பலும்
பேசித் தேயும் பெருமைகளாயின.

சொந்த மொழியில் சொந்த மண்ணை
அடையாளம் காட்டும் அதிகாரம் இழந்து
இந்தியன் என்றும் சிறீலங்கன் என்றும்
தொட்டிலிருந்தே முகவரி துறந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனத்த தடிகளில் சொடுக்கும் சாட்டையில்
நெஞ்சுக்கே நேரே நீட்டும் துப்பாக்கிகளில்
இருண்ட சிறைக்கு ஏவும் சட்டத்தில்
தமிழன் என்ற இயற்கைத் தகுதியை
மேலாதிக்கங்கள் மறுத்தபோது

வாய்நீளம் காட்டிய வழமைத் தலைமைகள்
வளைந்த முதுகுகளில் பேரினப் பூட்சுகள்
குனிந்த விழிகளில் நழுவிய நம்பிக்கைகள்
ஈனப்படுவதே இயற்கையென்றானது
மானுடத்தின் ஒரு மாபெரும் பகுதிக்கு

கனவில் பழமையில் காய்த்துப் போன
தமிழினத்தின் செவிப்பறை கிழிய
தெற்கிலிருந்தொரு வெடிமுழக்கம். . . . .

அரசுக்கு வன்முறை மதமான பின்பு
விடுதலைக் கோரிக்கை இராட்டினம் சுற்றுமோ?
அடிமை வாழ்வு கண்ணீரில் எழுதப்படும்
விடுதலையின் தொடக்கமோ குருதித் துளிகளில்
பேரினவாத முகத்தின் முன்பு
இன்று
பிரார்த்தனைகள் இல்லை
ஆணவம் கிழிபடப் புலியின் அறைகள். . . . .

எவனது முழங்காலுக்குக் கீழும்
தலை சாய்த்துக் கிடக்காது தமிழினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த அடையாளங்கள் மீட்கப்படுகின்றன
தொலைந்த முகவரிகள் தொடுக்கப்படுகின்றன
முடங்கிய கைகள் துப்பாக்கிகளாக
உலகக் கூரையில் தமிழின முழக்கம்

தமிழர்க்கு இந்தத் தகுதி யாரால்?
ஒடுக்கு முறையாளர்கள் உச்சரிக்கத் தயங்கலாம்
அடிவருடிகள் இந்த வரலாற்றை மறுக்கலாம்
விடுதலைக்குப் போராடும் வீரர்கள் எவர்க்கும்
உலக மூலையில் எங்கிருந்தாலும்
அடையாளம் தெரியும் அவர்கள் புலிகள்

இளைய தீபங்களின் தியாக ஒளியில்
எழுகின்ற முகங்கள் புலிகளின் முகங்கள்
அர்ப்பணிப்புக்கான மானுட உவமைகள்

பிரபாகரன் என்பதும், மாத்தையா என்பதும்
தனி மனிதர்களின் பெயர்களில்லை
விடுதலை அவாவும் தமிழினத்திற்கு
இந்தப் பெயர்களே இனிமேல் பொருள் தரும்
இந்த முகங்கள் தனி முகங்கள் இல்லை
உரிமைக்குப் போரிடும் இனத்தின் முகங்கள்

ஈழத்தின் நெருப்பு விண்ணை எட்டும்
இளைய குருதியால் கடல்கள் சிவக்கும்
நாளைய கதிர்கள் தமிழீழ மண்ணில்
விடுதலை என்ற விடியலை எழுதும்.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலையின் முகம் தெரிந்தவள்

புதல்வர்கள் இல்லாமல்
திரும்பும் புரவிகளில்
விழிகளைக் குவித்து
இவள்
யுகம் யுகமாய் நிற்கிறாள்
பழைய புறநானூற்று
வரிகளிலும்
இன்றைய நீக்கிரோவின்
பாடல்களிலும்
அந்தப்
பெரு மூச்சின் வெப்பம்
இன்னும் தொடர்கிறது
எல்லைகள் கடந்தது
இவளின் கண்ணீர்
சந்தடி செய்யாமல்
புறப்பட்டுப் போனவன்
படுத்திருந்த பாய்
இன்னும்
விரித்தபடி கிடக்க.....
பிடரி மயிரை
நீவிய விரல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயின் கோரை வரிகளைத் தடவும். . . .
அவன் மேனியில் அழுந்திய
கோரை வரிகளில்
அவனைத் தரித்த
கருப்பைச் சூடு
மூடிக் கிடக்கும்

எல்லாக் கதவையும்
விடுதலையின் கரங்கள்
தட்டும் ஓசை
தங்களுக்கு மட்டுமே
கேட்கும் என்று
பாயில் புரளும்
புதல்வர்கள் நினைக்கிறார்கள்

ஊருக்குள் பிரவேசிக்கும்
விடுதலையின் முதற் சுவடு
யாருக்கும் முந்தி
இவளுக்குக் கேட்கும்
ஒவ்வொரு தாய்க்கும்
விடுதலையின் முகம் தெரியும்
கட்டுகள் அறியாத
காலத்தில். . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மை அவளுடன்
கை கோர்த்திருந்தது
தாய்மைக்கு வாய்த்த
பிரபஞ்ச முதல் தோழி
விடுதலைதான்

உனது நொடிகளை
ஏந்திய துப்பாக்கியிலும்
தனது அமரத்துவத்தை
அணிந்த சயனைட் குப்பியிலும்
நிச்சயித்தபடி நிற்கும் இவன் -
"யாரென வினவுவீராயின்"
இவன் சேய்
நான் தாய்
எமது இல்லம்
புலி பிறந்து வளர்ந்த குகை-

பாசாங்கு செய்யாதே!
கிளியின் சிறகுகளை
முறிக்காதவன் போலவும்....
புறாவின் மார்பைத்
துளைக்காதவன் போலவும்....
எம் மண்ணில்
நுழையும் முன்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரது குருதியால்
கறைபட்டுப் போயின
உனது கொடிகள்?
விரிந்து செல்லும்
உனது நெருப்பால்
எரிந்த குருவிக் கூடுகள்
எத்தனை
எத்தனை?
புரியுமா உனக்கு?

நீட்டிய உனது
துப்பாக்கிக்கு முன்பு
வற்புறுத்தப்பட்ட
கேடயங்கள் அல்ல யாம்....
பருந்தை எதிர்த்துக்
கோழி. சிறகை விரிப்பது
குஞ்சுகள் கூட
மிரட்டுவதாலா?
நிற்கும் நாங்கள்
பத்துமாதம் சுமந்த
கர்ப்ப பைகள்
முடிந்தால் கிழித்துக் கொள்
மறுபடியும் மறுபடியும்
பிரசவிப்போம்.

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்சியாயும் சத்தியமாயும்

பொறு ஈழமே
புதிதாய் உனது
பூமியை மிதிக்க
இந்தியப் பூட்சுகளுக்கு
கொஞ்சம் அவகாசம் தேவை.

அதன்
இரும்பு லாடன்களுக்குள்
ஒட்டிக் கொண்டிருக்கும்
இன்னும் ஒரு சில
பூவின் இதழ்கள்....
துடைக்க வேண்டாமா?

எவ்வளவு சுறுசுறுப்பான
கூத்தாடிக்கும்
ஒரு மாறு வேடம் பூணக்
கொஞ்ச நேரம் வேண்டாமா?

குரூரம் இறுகிய முகங்களுள்
தற்காலிகமாவது
ஒரு புன்னகையைப் பொருத்தச்
சிறிது காலம் வேண்டும்.
"இந்திய ராணுவத்தை
உடனே அனுப்பு
ஈழத்தை மீட்க
உடனே அனுப்பு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் அறியாது
உதடுகளில் திணிக்கப்பட்ட
முழக்கங்களுக்குக் கீழே
மிதிபட்டுத் துடிக்கும்
உண்மையின் ஓலம்
எனது கரைகளுக்கே
எட்டாதபோது
உனது கரைகளைத்
தொட்டா விடும்?
நாளை இவ்வரிகள்
சாட்சியாய் இருக்கும்
நாளை இப்பாடல்
சத்தியமாய் இருக்கும்.

வலக்கன்னம்
பாசிசக் கைகளால் வீங்க
இடக் கன்னத்தைக் காட்டுவது
இந்தியாவுக்கா?
அறிவாயா?
பருந்தின் கூரிய சொண்டுகள்
பிரிவது
ஒரு புறாக்குஞ்சுக்கு
முத்தம் கொடுக்கவோ?

உள்ளான் குஞ்சே!
எமது கரை
உனக்குப்
பதுங்குகுழியாகட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணார்ந்து பார்!
இந்த வானத்தின்
கிழக்கிலும் மேற்கிலும்,
உதிர்ந்து கொண்டிருப்பவை
அனாதை இறகுகள்
பறந்து கொண்டிருப்பதோ
பருந்தின் பரிவாரம்

என் விழிகளில் முட்டிநிற்கும்
கண்ணீர் ஊடகத்தின் வழியே
மங்கலாக
ஒரு காட்சி விரிகிறது

சுதந்திர வெறியில்
உன்னைத் தழுவ
என் சிறைகளை நான்
உடைத்துக் கொண்டிருக்கின்றேன்.

("கிழக்கும் பின்தொடரும்" கவிதைத்
தொகுப்பிலிருந்து )

○ ○ ○
○ ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை கானம்

கானம் ரத்தகானம்
கானம் ரத்தகானம்
வீசும் காற்றைச் சுடுகிறது,
கரையில் மோதும் அலைகள் எல்லாம்
கனலை இறைக்கிறது

கானம். . .

வெடித்துச் சிதறும் இதயங்கள் அங்கே
விம்மி இசைத்திடும் விடுதலை கானம்
துடிக்கும் இதயம் உனக்கிருந்தால் உன்னைத்
தூங்கவிடாதந்த ரத்தகானம்.

கானம். . .

ஈழத்திலிருந்து நீளும் கரங்களை
தோழமை கொள்வதெம் பிறப்புரிமை
கோழியின் செட்டைக்குள்
குஞ்சுகள் அடங்கும்
ஈழம் கழுகுக்கு பாசமா புரியும்

கானம். . .

ஈழம் வெல்வது புலிகளின் உரிமை
ஏற்றுக் கொள்வது எங்களின் கடமை
வாலை ஆட்டாதே இந்திய அரசே
வரிப்புலி முழக்குவார் விடுதலை முரசே

கானம். . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரம் காட்டவும் வாருங்கள்

கேடயமாய் எம்மைக் காத்த - எம்
மக்களே வாளாகவும் - இனி
மாறுங்கள்.
ஈரம் மிகுந்த நெஞ்சங்களே - இனி
வீரம் காட்டவும் வாருங்கள்

கேடயமாய். . . .

விழியிலும் மேலான
தாயகம் மீட்க
விடுதலைப் புலிகளாய் எழுந்தோம் 'மீனுக்கு நீராய்
வேருக்கு மண்ணாய்
இருந்தீர்கள் நாங்கள் நிமிர்ந்தோம்
இனியும் எமது போராட்டம் தொடரும்
விடுதலை எமது எல்லை
துணைவந்த நீங்கள்
தோளை உயர்த்தினால்
விடுதலை வெகு தூரமில்லை.

கேடயமாய். . . .

மக்கள் திரள் என்ற
மாபெரும் சக்திதான்
எமது தாயகம் மீட்கும்
மக்கள் யுத்தம் என்ற
மாபெரும் யுக்திதான்
நமது பணியை எளிதாக்கும்.
தோழமைப் புறாக்கள்
நம் துணையாகும்.
கொடிய வல்லூறை எதிர்க்கின்ற போது
தொடர்கின்ற போரில்
மக்கள் துணை கொண்டால்
விடுதலை இனியும் தப்பாது.

கேடயமாய். . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழு கடல்களும் பாடட்டும்

ஒப்புக்குப் போர்த்திய
அமைதித் திரையில்
ஓரங்கள் பற்றி எரிகின்றன
ஒடுக்க முடியாத உண்மையின் குரல்கள்
உலகின் முற்றத்தில் ஒலிக்கின்றன

ஏழு கடல்களும் பாடட்டும் - இன்னும்
எட்டாத வானமும் கேட்கட்டும்
ஈழவிடுதலைப் புலிகளின் குருதியில்
எழுதப்படுகின்ற மானுட கானத்தை
ஏழு கடல்களும் பாடட்டும் - இன்னும்
எட்டாதவானமும் கேட்கட்டும்.

ஆயிரம் பறவைகள்
எங்கள் கானக மரங்களில்
கூடு கட்டலாம்.
அவைகள் உலக சமத்துவம் பாடி
எங்கள் தரைகளில் முட்டலாம்

போர் விமானம் எம் தலைக்குமேலெனில்
புகையும் எங்கள் துப்பாக்கி
போர்க்கப்பலெம் அலைக்கு மேலெனில்
கடலே எதிரிக்குச் சமாதி - இதை
ஏழு கடல்களும் பாடட்டும் - இன்னும்
எட்டாத வானமும் கேட்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழை திருத்தம்

| பக்கம் | பந்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 3 | தலைப்பு | 1 | ரத்த தானம் | ரத்த கானம் |
| 8 | 3 | 3 | நசுக்கும் | நகரும் |
| 10 | 3 | 3 | நிமித்தி | நிமிர்த்தி |
| 13 | 1 | 5 | கடைசிவரையும் | கடைசிவரைக்கும் |
| 13 | 3 | 6 | கமளும் | கமழும் |
| 16 | | 20 | வந்தீர்களா? | வந்தீர்களோ? |
| 17 | 2 | 3 | சின்னங்களை | சிங்கங்களை |
| 23 | 6 | 3 | நிற்பவோ | நிற்கவோ |
| 24 | 2 | 3 | இன்னும் | இன்னமும் |
| 25 | 1 | 2 | நெஞ்சுக்கே | நெஞ்சுக்கு |
| 26 | 2 | 4 | எவர்க்கும் | எவருக்கும் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழக முற்போக்கு முகாமின் முதன்மைக் கவிஞரான இன்குலாப் அவர்கள், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின்பால் ஈடு

— இன்குலாப் —

பாடு கொண்ட கவிஞர்; தமிழீழ விடுதலைக்காகப் போராடும் உண்மை இயக்கத்தையும், தலைவனையும் தொடக்க காலத்திலேயே இனங்கண்ட கவிஞன் இந்திய வல்லாதிக்க வல்லூறுகளின் உள் நோக்கத்தை அன்றே அம்பலப்படுத்திய கவிஞன்; தனது பேச்சிலும், எழுத்திலும், கவிதைகளிலும் விடுதலை, பொதுவுடமை உணர்வுகளை ஊட்டி வரும் மக்கள் கவிஞன்.

தமிழ்த்தாய் பதிப்பகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org